# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
# S.C. 1/2025
## Prosecution Witness : 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அப்துல் லத்திப் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. அப்துல்லா | **Calling** | : | ரேசன் கடையில் வேலை |
| **Village** | : | பேகம்பூர் | **Religion** | : | முஸ்லீம் |
| **District** | : | திண்டுக்கல் | **Age** | : | **36** |
| | | | **Dated** | : | **20.01.2026** |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 4-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 5), **திரு. அப்துல் லத்திப்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ரேசன் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. 2011ம் ஆண்டு 20ம் தேதி மாதம் 1 அல்லது 2 என்று நினைக்கிறேன், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் இருந்து எனது அக்காவிற்கு போன் செய்தார்கள். என் அக்கா அமிதா பானுவின் வண்டி காவல் நிலையத்தில் உள்ளதாகவும், அதை வந்து எடுத்துக் கொண்டு செல்லுமாறும் சொன்னார். அதனால் எனது அக்கா என்னை கூட்டிக் கொண்டு சென்றார். அங்கு என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். வேறு எந்த விபரமும் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையில் கடந்த 07.05.2011ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு திண்டுக்கல், மக்கான் பள்ளியில் மதம் சம்மந்தமாக பேசிக் கொண்டு இருந்தபோது, மைதீன் பாட்ஷா, அபுபக்கர் ஆகியோர் KVR மெருகுக்கடை முன்பு உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள் என்றும், அப்போது இந்த வழக்கின் 1-ம் எதிரி இப்ராம்ஷா, சம்சுதீன் என்பவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்தார் என்றும், மற்றொரு எமஹா மோட்டார் சைக்கிளில் மைதீன் மற்றும் கொட்டாய் என்ற யூசுப் மௌலானா இருவரும் வந்தார்கள் என்றும், மேற்படி எதிரிகள் நால்வரும் மைதீன் பாட்ஷாவும், அபுபக்கரும் பேசிக் கொண்டு இருந்த இடத்திற்கு சென்று, அவர்களை ஓடவிடமால் மறித்து நின்று கொண்டார்கள் என்றும், அப்பொழுது 1-ம் எதிரி இப்ராம்ஷா தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அபுபக்கரைப் பார்த்து நீ தான்டா எனக்கு எதிராக சாட்சி சொல்றவன் என்று கத்தியால் வெட்டினார் என்றும், அதை மைதீன் பாட்ஷா தடுத்தார் என்றும், இந்த சமயத்தில் அபுபக்கர் அவர்களை தள்ளிவிட்டு ஓடிவிட்டார் என்றும், அதனால் ஆத்திரமடைந்த அனைவரும் மைதீன் பாட்ஷாவை பார்த்து, இவனை குத்திக் கொல்லுங்கடா, இவன்தான் அவரை தப்ப விட்டவன் என்று கத்தினார்கள் என்றும், இப்ராம்ஷா, மைதீன் பாட்ஷாவை நோக்கி நீதான்டா தப்பிக்கவிட்டாய், உன்னை உயிரோடு விடக்கூடாது என்று சத்தம்போட்டு, இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று கத்தியால் மாறி மாறி குத்தினார் என்றும், தெருவில் இருந்தவர்கள் இந்த சம்பவத்தைப் பார்த்து சிலர் வரவும், நாங்களும் அருகில் போகவும், எதிரிகள் அவர்கள் வந்த இரண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், மைதீன் பாட்ஷாவிற்கு இடது தோள்பட்டை, இடது பக்க வயிற்றில் இரண்டு இடத்தில் இரத்தக்காயம், இடது காது பின்புறம், இடது மார்பில் இரண்டு இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது

என்றும், மருத்துவமனைக்கு கூப்பிட்டதற்கு அவர் வரமறுத்துவிட்டார் என்றும், மைதீன் பாட்ஷாவின் சகோதரி சகீரா பானுவிற்கு தகவல் சொல்லி அவர் வந்து, அந்த வழியாக வந்த போக்கு வண்டியில் ஏற்றி மைதீன் பாட்ஷாவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டு, உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 20.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.01.20 15:18:13 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 1/2025**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சரவணக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ராமகிருஷ்ணன்** | **Calling** | : | **நகைப் பட்டறை வேலை** |
| **Village** | : | **கிழக்கு ரதவீதி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **42** |
| | | | **Dated** | : | **20.01.2026** |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 4-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 8), **திரு. சரவணக்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நகைப் பட்டறையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. என்னுடைய நண்பரின் வண்டி காணாமல் போய்விட்டது சம்மந்தமாக திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்திற்கு போனேன். அப்பொழுது போலீசார் என்னிடம் என்னுடைய முகவரியை வாங்கிக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அதை எப்போது, எங்கு வைத்துப் போட்டேன் என்று எனக்குத் தெரியாது. **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு**

**செய்யப்படுகின்றன.** இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையில் கடந்த 08.05.2011ம் தேதி காலை 10.30 மணிக்கு திண்டுக்கல் - வத்தலக்குண்டு ரோடு பைபாஸ், கருப்பணசாமி கோவில் அருகே வந்தபோது, ஆஜர் எதிரிகளை போலீசார் அந்த இடத்தில் வைத்து கைது செய்ததாகவும், அதில் மைதீன் என்பவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கு சம்பவத்திற்கு எதிரிகள் பயன்படுத்திய கத்தியை போலீசார் கைப்பற்றினார்கள் என்றும், அவற்றில் நானும், என் நண்பர் முத்தையாவும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 20.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.01.20 15:18:21 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.